News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka
Under No.Q / J / 104 / News / 89
*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*
Vol: 156 Jaffna, Friday 7, 14 April 1995 No 14 & 15
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island Rs 100/-
*For Advertisements*

*Apply to:*
THE MANAGER

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

Library Periodicals Division RECEIVED 1995-5-18

## Sugar & Dhal on Dry Ration

The Rehabilitation Branch of the Jaffna Secretariat has decided to sell, sugar & dhal, through the local Multi - Purpose Co-operative Societies for the coming Tamil New Year. A A family of two will receive 3 Kilo Sugar and 1 Kilo Mysoor Dhal. A family of 3 - 4,4 Kilo Sugar and 2 Kilo Dhal, and a family of 5 or more will receive 5 Kilo Sugar and 3 Kilo Dhal.

Meanwhile the Rehabilitation Branch has decided to reduce the price of Sugar and Dhal to Rs. 30.50 and Rs 31.50 respectively.

## Houses for Refugees

It was reported that the Government plans to construct permanent houses for Sinhalese and Muslims in South Vavuniya and Cheddikulam a Tamil village in the Mannar area under pretext of resettlement.

The Tamil refugees complain that only temporary sheds were built for them. It is also reported that Tamil villages in the East are resettled with Sinhalese under the pretext of development under Mahaweli C Section.

## French Doctors to Quit

It is believed that the French Organization which has sent French Doctors as volunteers to Jaffna has decided to withdraw its medical services from Jaffna. This is because, the Sri Lankan Goverment has not taken any steps to improve the medical services in Jaffna. The patients have requested the French Team to remain until the situation improves.

According to the Editorial of 'Eelanatham' of 5 4 95 it is a shame on Jaffna people that almost all medical graduates leave Jaffna to work elsewhere at the time there is an acute shortage of Doctors in Jaffna. The Minister of Health, Mr. Fowsi is to write personal letters to these graduates requesting to serve in Jaffna.

## School Vacations

The schools in Jaffna close for the 1st term vacations on 7th April 1995 and shall reopen on 28th April.

During the holidays the Christians will observe Good Friday on 14th and Easter on 16th. The Hindus will celebrate the New Year on 14th of April. which falls on Good Friday.

## Affected students go to Colombo

Eight students from different schools in Jaffna went to Colombo on the 18th of March, 1995 to meet the officers of the University Grants Commission and the Ministry of Education to explain the difficulties in gaining University Admission They argue that even though Jaffna is an affected area, Jaffna students have to obtain more marks than the students in Colombo to gain admission to the University. They also point out that Jaffna University have vacancies and they are not filled even though the Authorities of the Jaffna University are anxious to admit them at Jaffna University. The President has now appointed a committee to inquire into the malpractices in the Selections - Ed.

## Dr. Robert Porter Returned

Dr. Robert Porter, Missionary of Jaffna College, returned to Colombo on the 23rd of March, 1995 after his furlough in United States. He will resume work at Jaffna College in April, 1995.

## Battle of North (Correction)

The Scores were reported erroneously.

The corrected scores are:

St John's 1st innings
233 all out

Jaffna Central 1st innings
188 all out

St. John's 2nd innings
283 for 9 at close of play.

## Welcome Showers

Some parts of Valigamam North and South areas experienced brief showers of rains on 4.4 95 This brought the thermometer scale a little lower, which otherwise remained very high for some time

## Alumni Representative Board of Directors Jaffna College

Mr. T. Anantharatnam was unanimously elected to the Jaffna College Board of Directors by the Alumni Association of Jaffna College. He shall serve on the Board for one year. The Alumni Association called for nominations to fill the vacancy created by the death of Mr. M. A. Velupillai.

Excelled in studies and sports especially hockey while at College. He graduated from University of Ceylon and joined the staff at Jaffna College and served for more than 30 years. He was a Grade One Special Post holder and functioned as the Physical Director. He is a loyal Alumnus. We wish him well.

## Refugees from Tamil Nadu on Hunger Strike

The refugees from Tamil Nadu who are kept in the camps in Vavuniya have launched on a hunger strike. They claim that their belongings are held up unlawfully in Trincomalee. They also claim, they have not received any relief. A memorandum is sent to the President.

## Medical Team to treat Cancer Patients

A team under the leadership of Dr. Jeyantha Balawardhana is to visit Jaffna to treat cancer patients in Jaffna for a week This is because of the difficulties these patients experience in going to Maharagama for treatment.

## A New Church at Wattala

We are very happy to report that at last our prayers and efforts are answered and we have purchased a property at Wattala. This will be used for our Church and the Parsonage. It cost Rs. 15,00,000/- We are very grateful and proud of our Church. The church contributed Rs 200,000/- from our general fund and the members generously contributed Rs. 90,000/- towards this.

The Diocese found the rest of the money. The new Centre was dedicated by Rev S Jeyanesan, Pastor of Colombo Church on 15.01 1995 followed by a Communion Service. A large Congregation from Colombo and Wattala attended this function. Thereafter the Wattala Parishners hosted every one with a tea party.

We hope and pray that day by day it will be a blessing to many.

## Easter Bajanai

Easter Bajanai was held at Kopay Training College on 31-3-95 at 10-00 a. m.

It was organized by the Christian Union of the Training College. The Bajanai was led by its President, Mr. P. Thevamithiran.

The Message was given by the Rev. V. N. Tharmakulasingam.

## 'THE MORNING STAR' List of Annual Subscribers

The Bishop of Colombo
Cathedral Precinets B 16 13
Bavthaloka Mawatta
Colombo 7

The Ceylon Bible Society
293 Galle Road Colombo 3

Mr. S. Eliyathamby
1 Elibauk Road Colombo 5

Mr. Guharaj
P T. I. Correspondent Hotle Taprabane Colombo 1

Mr J.Jeyakumar
J 1/7 Anderson Flats Colombo 5

Mr. T. Thabendran
52, Ratnkare Place Dehiwela

(Continued on page 8)

## C.C.A Appeals to Reconsider Death Sentence Passed On Two Christians in Pakistan

C.C.A has appealed to all member churches to request the Government of Pakistan to reverse the death sentence passed on two christians. We publish the letters from C.C.A and the news item. We also urge our readers to pray for the two accused and also to write to the Government of Pakistan to reconsider the judgement

To : CCA Member - Councils and Member - Churches
CCA International Affairs Committee
Re :Sentencing to Death of Two Pakistani Christians Accused of Violating the Blasphemy Law

Dear friends,

Our attention has been caught by a news item last Friday, February 10 about the sentencing to death of two Pakistani Christians, Salamat Masih, and Rehmat Masih, after one year of trial. If you recall previous correspondence from our office, co-accused Manzoor Masih was killed last year by religious fanatics, while undergoing trial.

We urge you to appeal to the authorities to reconsider their decision and to repeal the Blasphemy Law which has been abused and has been used to violate the rights of many members of minority religious groups You may also write to your countries' diplomatic representatives to call their attention to this issue.

Please find enclosed a copy of the news clipping and a copy of our letter to NCC - Pakistan. We will furnish you with more information later.

Yours sincerely,

AIDA JEAN MANIPON
Executive Secretary for International Affairs
AJM/mt/masih 1
Our ref : IA9502048
13th February 1995
MR. SAMUEL GILL
General Secretary
National Council of Churches in Pakistan
32-B Shahrah-e-Fatima Jinnah
P O Box 357
Lahore 4
PAKISTAN

Dear Mr. Gill,

Last Friday, February 10, 1995, our attention was caught by a small item in the South China Morning Post about the sentencing to death of Salamat Masih and Rehmat Masih. We hope to urge member - churches and human rights groups to appeal to the authorities to reconsider this decision and to urge them to repeal the Blasphemy Law We want your advice on what you think we should do, and to know also what the churches there are doing about this case.

Please find enclosed a copy of the new clipping and a letter by the Asian Human Rights Commission to Mr. Ayala Lasso, UN High Commissioner for Human Rights.

I look forward to hearing from you soon.

Yours sincerely

AIDA JEAN MANIPON
Executive Secretary for International Affairs
AJM/mt/NCCPA

(Continued on page 7)

## Jaffna College Institute of Agriculture Releases Another Publication of Merit

At a very impressive meeting on Saturday the 1st of April, 1995 at the J. C. Agricultural Institute another worthy publication entitled "Intergrated Pest Control Management" was released by Mr. C. Sivaloganathan, Deputy Director of Agriculture and the recipient was Rotarian E. Saravanapavan. In releasing the book Mr. Sivaloganathan a specialist in the field highly commended the author Mr. M. Kandasamy, the Senior Instructor at the Institute. The meeting was chaired by the Principal Mr. T. Kugathasan with the hall fully occupied with every seat taken by a distinguished and learned audience. After the lighting of the traditional oil lamps, the welcome remarks were made by student S. Kulendran. Mr. S Manoharan, lecturer delivered an introduction to the subject followed by greetings from Mr A. Kadirgamar, former chairman of the JCIT& AI Council, Mr. K. Kanthasamy, Director of Education, Mr. Vethanayagam Silva, Retired Deputy Director of Agriculture and Dr. K. Canagarajah of Milk-white Products. Greetings were also read from Miss T. Periathamby, Director, of Education.

Very educative and incisive appraisals of the book were given by two very prominent zoologists in the field of entomolgy, Professors V. K. Ganeshalingam, Head of the Department of Zoology and Rev. Fr. G. F. Rajendram of the Jaffna University. Mr. S. Sinnathurai, Deputy Director of Agriculture also made critical comments on the Book.All the very knowledgeable speakers spoke of the pioneering efforts of Mr. Kandasamy, his effort being the first in the field in Tamil.This was Mr. Kandasamy's seventh publication, but his first book releasing meeting. All the previous publications were sold out. His eighth publication is also ready for sale entitled "The uses of the Margosa Tree." Mr. Kandasamy was also honoured with the traditional shawl by Dr. Canagarajah and Mr. Kandasamy responded, with a speech of thanks and a vote of thanks by Mr. K. Jeyarajah of the non-academic staff followed. The Principal and the Institute too were thanked and commended by all for the great service it was rendering to the progress of Agriculture and Agriculutrual education. Tea and refreshments were served for all and a brisk sale of books took place with many making large orders.

Mr. S. Sinnathurai, Deputy Director of Agriculture also made critical comments on the book.

## Anglican Methodists Unity Talks Resume in England

Looking forward to the Unity Talks that were resumed after a lapse of two decades - negotiations that were curtailed by the Anglican Church, the President of the Methodist Conference in Britain Revd Dr. Leslie Griffiths goaded the Anglicans about unity saying that an "egg bound" Church of England should skip negotiation and "open the doors" to Methodism. His remarks were met with cautious response from Anglican and Methodist ecumenists during the first week of March when the negotiations resumed. Dr. Griffiths also said that the Church of England "...must take a strong lead. They must make a generous offer... Christian unity can no longer be the product of endless negotiation between our lawyers and bureaucrats. I am fed up with hearing that we Methodists have all the marks of apostolicity. It feels so patronising. Why can't they just open the doors, offer us room allow us to be to them what Jesuits, Dominicians, Franscicans and Benedictines are to the Roman Catholic Church?" (Church Times of 3/2/95)

A brain - storming Anglican-Methodist encounter took place during the first week of March, 1995 and a report was issued on 'way forward towards visible unity' between the two Churches. Thirteen representatives met under the chairmanship of the Rt. Revd David Tustin, Bishop of Grimsby and Chairman Council of Christian Unity & the Revd Brian Beck, Secretary of the Methodist Conference. Both men described the mood of the gathering as 'extremely positive.' They stated, "After the long gap in official contacts between us there was a real feeling that the time is ripe to pursue the possibility of reunion We believe that we have a case to put to the Churches, and want to spell

(Continued on page 7)

# வாழும் எழுத்துக்கள்



## ஆர். பி. சேதுப்பிள்ளை

மனத்திண்மையே வைராக்கியமாகும் மனத்திண்மை அற்றவர்கள் ஒரு கொள்கையில் நிலைத்து நிற்கமாட்டார்கள். மன உறுதியுடையவர்கள் மலை போல உடையாது நிற்பார்கள். அவர் மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார். மனவுறுதி கொண்டு அறநெறியில் நிற்கும் மாந்தரை இவ்வுலகம் போற்றும். '' அரிச்சந்திரன் வாய்மை எனும் சத்திய நெறியில் வழுவாது நின்றான் பலவகையான சோதனைக்கு உட்பட்டான் பதியிழந்தான் பாலனையிழந்தான் பசுநிதி இழந்தான் இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக எல்லாவற்றையும் இழந்து ஈனத்தொழில் புரியும் காலத்தும் சத்தியத்தை விடாது பற்றி நின்றான் தன்னைச்சோதித்த முனிவரை நோக்கி

'' பதியிழந்தனம் பாலனையிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனி நமக்குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலேன் ''

என்றான் அது கேட்ட முனிவன் மதியிழந்து வாயிழந்து மானமும் இழந்து சென்றான் என்று அரிச்சந்திரன் சரித்திரம் கூறுகிறது.

இனி மனிதர்க்குரிய குணங்களில் சிறந்தது பொறுமை என்பர் உள்ளம் கலர்ந்து எழுந்து ஓங்கும் சினத்தைக் காத்துக் கொள்ளும் குணமே குணம் என்றார் ஒரு கவிஞர் வெம்மை. விளைவிப்பது கோபம் செம்மை விளைவிப்பது பொறுமை இத்தகைய பொறுமை மன உறுதியாலே. வரும் பொறுமையின் தன்மையைத் தம் வாழ்க்கையில் பொருந்தக் காட்டினார் இயேசுநாதர். தீயவர்கள் அவரைச் சூழ்ந்து சீறினார்கள், கழியால் அடித்தார்கள், காறி உமிழ்ந்தார்கள், முள் முடியைத் தலையிலே வைத்து அழுத்தினார்கள், கையிலே நெடுஞ் சிலுவை கொடுத்து வீதியின் வழியாக நடத்திச் சென்றார்கள். இயேசு நாதர் திருமுகம் சோர்ந்தது. நா விழுந்தது கண் குளிர்ந்தது இத்தகைய இளைத்த மேனியில் கயவர்கள் இரும்பாணியை அறைந்தார்கள் அப் பெருந் துயரத்தைப் பொறுத்தார். இயேசு நாதர் சிலுவையிலறைந்து துன்புறுத்தியவர் மீது இரக்கமும் கொண்டார். இறைவனை நோக்கி எந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்கள் பிழையை மன்னியும் என்று பிரார்த்தித்தார். இத்தகைய இரும்பொறையையும் பெருங்கணையையும் அழகாகப் பாடினார். கிறிஸ்தவக் கம்பர் என்று புகழ்கின்ற கிருஷ்ண பிள்ளை

'' தன்னரிய திருமேனி சதைபுண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்து எந்தாய்
இன்னதென அறிகில்லார் தாம் செய்வதிவர் பிழையை
மன்னியும் என்று எழிற் கனிவாய் மலர்ந்தார் நம்
அருள்வள்ளல்''

என்ற பாட்டில் தின்மை செய்தார்க்கும் நன்மை செய்த இயேசு நாதரை அருள்வள்ளல் ' என்று கவிஞர் போற்றியிருப்பது பொருத்தமுடையதன்றோ

அரிச்சந்திரனும் ஏசுநாதரும் அறநெறியிலே வைராக்கியம் பூண்டவர்கள் இதற்கு மாறாகத் தவறான வழியிலே காணப்பட்டு விடாக்கண்டராக நின்றாரும் உண்டு. கற்பின் செல்வியாகிய சீதையைக் கவர்ந்து சென்று சிறையில் வைத்தான் இராவணன். சீதையை மீட்பதற்காக இராமன் இலங்கை மீது படையெடுத்தான்: பெரும்போர் மூண்டது. இராவணன் மைந்தனாகிய இந்திரசித்தன் இலங்கையில் நிகரற்ற வீரன். அவன் வென்று வருவான் என்று எண்ணிய இறுமாந்திருந்தான். இராமனை் போர்களத்தில் பகைவரது திறத்தை நன்றாக தெரிந்த இந்திரசித்தன் இராவணன் மாளிகையை அடைந்து மன்னனைத் தொழுது 'ஐயனே இன்று நடந்த போரில் நான் அரிய பெரிய படைக்கலங்களையெல்லாம் விழுத்தேன். அவை பகைவர் மீது செல்லவில்லை, ஆதலால் போருக்கு அஞ்சி இங்கு வந்து விட்டேன் என்று வருந்திடலாகது. உன் பால் வைத்த ஆசையால் ஒன்று சொல்ல கருதி வந்தேன். சிறைப்படுத்திய சீதையை விட்டுவிட்டால் நாம் சீரும் சிறப்பும் சீதையால் வாழலாம். பகைவர் சீற்றம் தீர்வர் நம் நாட்டை விட்டு நீங்குவர்; பகையும் போருமின்றி நீ பண்புற்று வாழ்வாய். உன்பால் வைத்த அன்பினால் இதை சொன்னேன்'' என்றான்.

அம்மொழி கேட்ட இராவணன் சிந்தை கலங்கி சீற்றம் கொண்டான். எதிரே நின்ற இந்திர சிந்தை நோக்கி பேதையே! நீ அறியாமற் பேசினாய் உன்னை நம்பியிருக்கிறேன் என்று எண்ணினாயா? என் தோள்வலியை நம்பியே சீதையை எடுத்து வந்தேன். எடுத்து வந்த மங்கையை கொடுத்து விடுதல் ஈனமன்றோ? மானமே உயிரினும் பெரியது. வீரப்புகழே வாழ்வினும் விரும்பத்தக்கது.

''வென்றில்லை என்ற போதும் வேதிமுள்ளளவும் யானும்
நின்றுள்ளன்றோ மற்றவிராமன் பேர் நிற்குமாயின்
பொன்றுதல் ஒரு காலத்தும் தவிருமோ பொதுமைத்தன்றோ
இன்றுள்ளோர் நாளை மற்வார் புகளுக்கும் இறுதியுண்டோ.

என்று சினந்து பேசினான் அது கேட்ட இந்திரசித்தன் குன்று முட்டிய குருவி போல மீண்டும் போர்களம் போர்த்தான் அரும்போர் புரிந்து ஆவி இறந்தான் இறுதியில் இராவணனும் போர் புரிந்து மாண்டான்.

---

# உயிர்த்தியாகி
# பக்தன் பொலிக்கார்ப்!

ஆதித் திருச்சபை தோன்றிய காலத்தில், உரோமாபுரி மக்கள் பல தெய்வங்களை வணங்கிவந்தனர். நளுக்கு நாள் இவர்கள் வணங்கிவந்த தெய்வங்களின் தொகை பெருகிக்கொண்டே போயிற்று. இதற்கு ஒரு வரையறை வகுக்கவில்லை. அதனால் தொமித்தியன் என்ற உரோமப் பேரரசன் (கி. பி. 81-96)- உரோமப் பேரரசர்களையும் தெய்வமாக மதித்து வணங்கவேண்டுமென்ற சட்டத்தைப் பிறப்பித்தான்.

முதலாம் நூற்றாண்டில் வசித்த கிறித்தவர்களுக்கு இச்சட்டம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. இது அவர்களுக்கு ஒரு பெருஞ் சோதனையின் காலமாக இருந்தது. விக்கிரகங்களையும் பேரரசர்களையும் தெய்வங்களாக வணங்குவதாக? கிறித்தவர்கள் குமுறினர்! விக்கிரகங்களை வணங்காவிடினும் பறவாயில்லை. ஆனால் ரோமப் பேரரசனை வணங்க மறுப்பது. ராஜத்துரோகம் எனக் கூறப்பட்டது. மறுப்பவர்களுக்குக் கொடுந்தண்டனை விதிக்கப்பட்டது.

பேரரசனை வணங்க மறுத்தவர்கள் பல வகையில் இம்சிக்கப்பட்டனர். சிங்கங்களுக்குமுன் எறியப்பட்டனர். எரியும் நெருப்பில் இடப்பட்டனர், வாளால் அறுக்கப்பட்டனர். இதற்காகவே, பக்தனாகிய யோவான் பத்மு என்னும் தீவில் தனித்திருந்து மரிக்கும்படி நாடு கடத்தப்பட்டார். கொலைசெய்யப்பட்ட 'அந்திப்பா' என்ற பக்தனைப்பற்றி திருவெளிப்பாடு 2;13 இல் காணலாம். இவ்வாறு பல கிறித்தவர்கள் இரத்தச் சாட்சிகளாக மரித்தனர்.

கிறித்துவில் கொண்ட பக்திக்காகத் தங்கள் உயிரைத் தியாகஞ் செய்த இரத்தச் சாட்சிகளில்- பொலிக்கார்ப் அத்தியட்சரும் ஒருவர். இவர் அப்போஸ்தவனாகிய யோவானின் நண்பர். புனிதர் யோவான் அடிகளாரே பொலிக்கார்ப்பை சிமிர்னா சபைக்கு அத்தியட்சராக நியமித்திருக்கலாம்: பொலிசார்ப் பிலிப்புப் பட்டணத்திலுள்ள கிறித்தவர்களுக்கு ஒரு நிருபம் எழுதியிருக்கிறார். அந்நிருபத்தில், இக்னேஷியஸ் என்ற பக்தனின் உயிர்த்தியாகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவர் கொலைக்களத்திற்குப் போவதற்கு முன் கூறிய வார்த்தைகள், அத்தியட்சர் பொலிக்கார்ப்பின் மனதை விட்டு அகலவில்லை. ''சம்மட்டியினால் இரும்பை அடிக்கும்போது, இரும்பு சிதறிப்போகிறதில்லை, அது உறுதியாக இருக்கிறதுபோல; துன்பங்கள் வரும்போது, சத்தியத்திலே உறுதியாயிருக்கவேண்டும்'' என்பதே அந்த வார்த்தைகள்.

புனித இக்னேஷியன் போதனையும், சாதனையும், பக்தன் பொலிக்கார்பின் பக்தியை அதிகமாகத் தூண்டிவிட்டது. இக்னேஷியசைக் கொலை செய்தவர்கள், பொலிக்கார்ப்பை விட்டுவிடுவார்களா?— அவர் 86 வயதுள்ள வயோதிபராயிருந்தபோதிலும், அவரையும் கொலைக்களத்திற்கு இழுத்துச் சென்றார்கள். பெருந்தொகையான மக்கள் வேடிக்கை பார்ப்பதற்காக வந்து கூடினர்.

உரோம இராணுவத்தைச் சேர்ந்த பெரிய அதிகாரிகள், நீதிபதி, பேரரசனின் பிரதிநிதி ஆகியோரும் வந்துசேர்ந்தனர். கொலைக்களத்தில் ஒரு விறகுக்குவியல் இருந்தது. அருகில் சிலர் நெருப்பை வைத்துக் கொண்டு காத்துநின்றனர். ஈட்டி

(6-ம் பக்கம் பார்க்க)



என்னெஞ்சம் சோர்கின்ற வேளையிலே -ஏசையா
உம் சிலுவைப் பாடுகளை எண்ணிடுவேன் இனி
உம் சிலுவைப் பாடுகளை எண்ணிடுவேன்

"அங்கமெல்லாம் சிதைகின்ற வேளையிலும்
ஆணிகளால் அழிந்திடாத உம்மன்பில்
அணுவேனும் நீரெனக்கு அருளுமய்யா - சிறு
அணுவேனும் நீரெனக்கு அருளுமய்யா

"வன்செயல்கள் வசைமொழிகள் வந்தபோதும்
வேதனையால் மாறிடாத உம்மனதை
ஒரு சிறிதேனும் நீரெனக்கு வழங்குமய்யா - அதை
ஒரு சிறிதேனும் நீரெனக்கு வழங்குமய்யா

கொடும்பாவப் பழிகளும்மைச் சூழ்ந்தபோதில்
குமுறாமல் இருந்திட்ட உயர்பண்பில்
கொஞ்சமேனும் நீரெனக்குத் தாருமய்யா அதில்
கொஞ்சமேனும் நீரெனக்குத் தாருமய்யா

-TDF

## வெங்காயத்தின் பயன்கள்

- அபூர்வ கிருமி நாசினி.
- சிறந்த மருந்துகள் தயாரிக்க உதவுக்ன்றது.
- தேக வெப்பம் தணிக்க உதவுகின்றது,
- மூளையின் ஆற்றலை பெருக்கின்றது.
- வாத நோயை நீக்கிறது.
- மூல வியாதியை குணப்படுத்த உதவுகின்றது.
- காது வலியை நீக்கிறது.
- கோழையை அகற்றுகிறது.
- ஜலதோஷத்தில் இருந்து காப்பாற்றுகின்றது.
- இரத்தத்தை சுத்திகரிக்கின்றது.
- இருதய நோயை குணப்படுத்துகின்றது.
- குன்ம நோயை குணப்படுத்துகின்து.
- குடலில் தங்குகின்ற வாயுவை வெளியேற்றுகின்றது
- சிறு நீரைத் தாராளமாக வெளியேற்றுகின்றது.
- தேள் கடிக்கும் கைகண்டமருந்து.

# பிறரைத் தீர்ப்பிடாதீர்கள் மன்னியுங்கள்!

"நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு பிறரைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள்" (மத்:7:1) நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து செய்த மலைப் பொழிவின் ஒரு பகுதி இது ஒரு சிறிய துரும்பு கண்ணில் விழுதல் என்ற உவமை மூலம் மேற்கூறிய வாக்கியத்தை விளக்குகின்றார்.

திருமதி எஸ். ஜெயநேசன்
17, பிரான்ஸிஸ் றோட்
கொழும்பு-6

அப்போஸ்தல நடபடிகள் 28 ஆம் அதிகாரம் 3-6 வசனம் வரை உள்ள பகுதியைப் படிக்கின்றபோது மக்கள் எவ்வளவு விரைவாக பவுலைப் பற்றி நிதானித்தார்கள் என்று காண முடிகின்றது. பவுல் உரோமபுரிக்குக் கைதியாக எடுத்துச் செல்லப்படும் போது அவர்கள் சென்ற படகு கடலில் மூழ்கியதால் பவுலும் அவரோடு கூட இருந்தவர்களும் நீந்தி ஒரு தீவில் கரை சேர்ந்தனர் அத்தீவில் அவர்கள் குளிர் காய்ந்து கொண்டு இருக்கையில் ஒரு பாம்பு அவரை தீண்டுகின்றது அவர் இறந்து விடுவார் என நினைத்து அவரைக் கொலை பாதகர் என மக்கள் தீர்த்தார்கள். ஆனால் பவுல் உயிரோடு இருக்கிறார் எனக் கண்டு அவரைத் தேவன் என்று கூறிப் போற்றினர்.

இவ்விதமாக சிந்திக்காமல் தீர்ப்புக் கூறுதல் தவறு என்று வேதம் கூறுகின்றது. தேவன் ஒருவரே தீர்ப்புக்கூற தகுதி உள்ளவர் அவர் தீர்ப்பு அளிக்கிறவராய் இருக்கின்றார். கா வுளின நியாயத்தீர்ப்பு பழையேற்பாட்டின் ஆரம்பத்திலேயே தொடங்கி விட்டது. காயீன் ஆபேலைக் கொலை செய்த பொழுது "உன் சகோதரன் எங்கே என்று கடவுள் கேட்கிறார்.

இவ்வாறு ஆண்டவர் என்றும் ஒருவன் தன் சகோதரனுக்கு விரோதமாக நடக்கும் போது அவர் விசாரிக்கிறவராய் இருக்கிறார். ஆகவே இவ்வுலகில் நமக்கு யார் தீங்கு செய்தாலும் பழி வாங்க வேண்டிய அவசியம்

(6-ம் பக்கம் பார்க்க)

## திருவும் அருள் திருவும்



திரு: புனித சனிக்கிழமையன்று சேமக்காலைகளில் ஆராதனை வைக்கிறார்களே இதில் ஏதாவது அர்த்தம் இருக்கின்றதா?

அருள்திரு: வருடத்தில் ஒருநாளாவது சேமக்காலையைத் துப்பரவுசெய்கிறார்களே! அது போதாதா?

-மணிமாறன்

## சன்மார்க்க பணி செய்வீர்!

- மொழியாலும் நிறத்தாலும் நாட்டாலும் மற்ற முறையாலும் பிரி உலகை முழு ஒருமைப்படுத்தும் வழியாதொன்று அறிஞர் பலர் வகை வகையே ஆய்ந்து வகுத்தனர் பல் சட்டதிட்டம் வாழ்வு பெறவில்லை.
- பழியேதும் அறியாத சன்மார்க்கம் ஒன்றே
பாழ்பிரிவு நினைவுவறுத்தும் பரிந்தொருமை கூட்டும்
அறியாத அன்புடையா அப்பா அம் மார்க்கம்
அவனியெல்லாம் பரவிடற் அருள்புரிவா யின்னே
- மண்ணெல்லாஞ் சன்மார்க்க மலராட்சி வேண்டும்
மார்க்கமெலாஞ் சன்மார்க்க மணங்கமழல் வேண்டும்
கண்ணெல்லாஞ் சன்மார்க்கக் காட்சியுறல் வேண்டும்
காதெல்லாஞ் சன்மார்க்கக் கேள்விநுழை வேண்டும்
- பெண்ணெல்லாஞ் சன்மார்க்கப் பிள்ளை பெறல் வேண்டும்
பேச்செல்லாஞ் சன்மார்க்கப் பேச்சாதல் வேண்டும்
பண்ணெல்லாஞ் சன்மார்க்கப் பாட்டிலெழல் வேண்டும்
பரம்பொருளே சன்மார்க்கப் பணிசெய்ய வேண்டுவேனே

திரு. வி. க.

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd 1841
மலர்: 156 7, 14-4-1995 இதழ்: 14, 15

## உயிர்த்தெழுந்த கிறிஸ்து

இறைவன் தாம் படைத்த மனுமக்கள் பாவத்தில் அழிந்து போவதை விரும்பாமல் தம் ஒரே பேறான மைந்தன் இயேசுவை இவ்வுலகத்திற்கு அனுப்பி- அவரில் விசுவாசங் கொள்ளும் எவரும் அழியாமல் நித்திய வாழ்வைப்பெறும் பொருட்டு இவ்வளவாய் இவ்வுலகில் அன்பு கூர்ந்தார் இதுவே நாம் அறிந்த அருட் செய்தி.

இயேசு பெருமான் எளிமையான கோலத்துடன் அமைதியின் மன்னனாய் தாழ்மையின் சொரூபமாய் ஊரெங்கும் சுற்றித் திரிந்து நன்மை செய்து இறையரசைப் போதித்து தம்போதனையின்படி சாதித்து சமுதாயத்தைச் சீர்திருத்த தம்மை அர்ப்பணித்தார். மக்கள் இறையரசில் குடிமக்களாய் புதுவாழ்வை வாழ்ந்து இறைவனை மகிமைப்படுத்த வேண்டுமென்பதே அவர் பணியின் நோக்கம்.

ஆனால் அன்றைய சமுதாயத்தில் எத்தனையோ நோய் நொடிகள் சுரண்டல்கள் அடிமைத்தளைகள் ஆக்கிரமிப்புக்கள் அடக்குமுறைகள் புறக்கணிப்புகள் மனித மாண்புக்கு மண்குவிப்புகள் இத்தகைய ஒழுக்கக்கேடுகள் அன்றுமட்டுமல்ல இன்றும் நமது சமுதாயத்தில் தாண்டவமாடுகின்றன.

மக்களைச் சீர்திருத்தி நல்வழிப்படுத்த எம் பெருமான் எடுத்த முயற்சிகளை மக்கள் எதிர்த்தனர். குருத்துவத் தலைமைப்பீடம் சாதாரண சமய அனுசாரிகள் படித்தோர் பாமரர் அனைவரும் வன்மையாக எதிர்த்து இயேசுவை சிலுவையில் அறைந்தனர். இது மனிதக் கணிப்பின்படி தோல்வியாகக் காணப்பட்டாலும் இறைவன் அவரை மூன்றாம் நாள் உயிரோடெழுப்பினார் தோல்வி முறியடிக்கப்பட்டது. வெற்றி மலர்ந்தது இதுவே உயிர்ப்பின் செய்தி.

அருட் செய்தியின் நோக்கில் உயிர்ப்பு ஒரு நிகழ்வு. கிறிஸ்துவின் வாழ்க்கை மரணத்தோடு முடிவடையவில்லை அவர் உயிரோடெழுந்தார்! எங்கெல்லாம் மக்கள் அவரின் உயிர்ப்பிரசன்னத்தை ஏற்றுக்கொண்டார்களோ - அவர்கள் வாழ்வில் வசந்தம் வீச ஆரம்பித்தது விழிப்புணர்வு பிறந்தது புது வாழ்வு மலர்ந்தது!

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் கண்ட சீடர்களின் சாட்சியில் விசுவாசப் புத்தொழி வீசிற்று. எதிர்ப்புகளும் வளர்ந்தன. ஆயினும் அஞ்சாமல் அருட்செய்தியை அகிலமெல்லாம் அறிவித்தனர் 'என் மீட்பர் உயிரோடிருக்கையில் எனக்கென்ன குறையுண்டு நீ சொல் மனமே' என் ஆர்வத்தோடு சமுதாயத்தை மாற்றி அமைக்க தம் உயிரையே தியாகஞ்செய்தனர். அன்றைய திருச்சபை மக்கள்! இன்று?

இன்று உயிர்த்தெழுந்த ஆண்டவரின் அடியார் நாங்கள் என நாம் உண்மையாக உணர்ந்தோமேயாகில் உயிர்ப்பு தன் மயமாக்கப்படல் (Personalize) வேண்டும்.

நமது வாழ்வில் நமது பேச்சில் இதுவரை இருந்து வந்த மாய்மாலத்தைக் களைந்து பழமைக்காகப் பழமையைப் பேணும் போக்கையகற்றி விவேகம் என்ற போர்வையில் நடைபெறும் ராஜதந்திரச் செயல்களைச் அகற்ற வேண்டும் உள்ளும் புறமும் மாசற்ற உயிர்ப்புள்ள வாழ்வை வாழவரும்படி நமது ஆண்டவர் அழைக்கிறார்.

இன்று நமது தமிழ்ச் சமுதாயத்தில் சூழ்ந்துள்ள இருள் அகலவேண்டும் பயம் நீங்கவேண்டும் சோர்ந்து தளர்ந்து நிற்கும் மக்களுக்கு உயிர்ப்பு அளிக்கவேண்டும். போரின் விளைவால் உயிர்ப்பற்ற சமுதாயமாக மாறிவரும் நமது சமுதாயத்தை ஒளிரச் செய்வது உயிர்த்தெழுந்த ஆண்டவரின் அடியாராகிய நமது கடமை. கிறிஸ்து பெருமானின் உயிர்ப்பு வாழ்க்கையில் ஒவ்வொரு கோணத்திலும் ஊடுருவ வேண்டும். அப்பொழுதுதான் நம் மக்களின் மனங்களில் நம்பிக்கை ஊற்றெடுக்கும் நமது சமுதாயம் புத்துயிர் பெற்று சுதந்திரமாக நல் வாழ்வு வாழ முடியும்.

"இன்று கிறிஸ்து எழுந்தார்
அல்லேலூயா!"

## எத்தனை பாடுகள்?



**பல்லவி**

எத்தனை பாடுகள் ஐயா - உமக்கு
எத்தனை பாடுகள் ஐயா - கிறிஸ்தையா உமக்கு
எத்தனை

**அனுபல்லவி**

அத்தனை பாரம் உம் அடியார் எமக்காக
அனுபவித்தீரே ஐயா — கிறிஸ்தையா - எத்தனை

**சரணங்கள்**

ஆதி மனிதராம் ஆதாமும் ஏவாளும்
ஆசைக்குட் பட்டனர் ஆண்டவனே உம்
பாதையில் விலகியே பாவிகளாயினர்
பரம்பரை மனிதரைப் பாவிகளாக்கினார்
வாதையில் லாநல் வாழ்வெமக் கருளவே
வானத்து வாழ்வையும் மகிமையும் விட்டு நீர்
பூதலம் போந்ததே போதாதோ ஐயா
பொன்னுடல் வதைப்பட்டுப் புதைபடல் வேண்டுமோ?
- எத்தனை

எண்ணம்போல் நடத்துன்றன் எண்ணமே இல்லாமல்
இந்த உலகத்தில் எல்லாரும் செல்லுவோம்
பண்ணிய பாவத்தின் பக்கமே எந்நாளுமே
பசையாக ஒட்டியே பாவிகள் ஆடுவோம்
அண்ணலுன் பக்கமே அணுகிட எமக்காக
ஆக்கையும் ஆவியும் அன்புடன் அளித்திடப்
புண்ணியா சிலுவையில் வெறுமையாய்த் தொங்கிய
பொன்னுடல் வதைப்பட்டுப் புதைபடல் வேண்டுமோ?
- எத்தனை

அருட்கலைஞர் நல்லைக்கவி இளங்கோவன்

## கண்பார்வை

விட்டமின் 'ஏ' சத்துக் குறைவினால் உலகில் வருடா வருடம் 30 கோடி குழந்தைகள் பார்வை இழக்கின்றனர். மேலும் பலவீதமான வியாதிகளும் சிறுவயதிலேயே ஏற்பட்டு உயிரை விட்டுவிடும் அளவிற்குக் குழந்தைகள் தள்ளப்படுகின்றன.

விட்டமின் 'ஏ' சத்து முட்டை, பால், பச்சை இலைகளுடன் கூடிய காய்கறிகள் பப்பாளி மீன் போன்றவற்றில் உள்ளன. குழந்தைகளைக் காப்பாற்ற இவை உணவில் இருப்பது அவசியம்.

## பிறரைத் தீர்ப்பிடாதீர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை கவலைப்படவும் தேவை இல்லை தீர்ப்பு கூறுவதை ஆண்டவரிடமே விட்டு விடவேண்டும் மன்னிப்பது நமது கடமை.

ஆண்டவர் மற்றவர்களைக் குறை கூற வேண்டாம் என்பதுடன் விட்டு விடவில்லை. குறை கூறாதிருக்கும் போது நீயும் குறை கூறப்படமாட்டாய் என்றும் கூறுகிறார். குற்றப்படுத்தல் கிறிஸ்தவம் அல்ல. யாக்கோபு 4:12 இல் நியாயத்தை கட்டளையிடுகிறவர் அவர் ஒருவரே அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர் மற்றவர்களை குற்றப்படுத்துவதற்கு நீ யார்? என்று கூறப்படுகிறது.

பல வேளைகளில் நாம் மற்றவர்களுடைய பாவத்தைக் காண முற்படுகிறோம் குடும்பத்திலும் வேலை செய்யுமிடங்களிலும் திருச்சபையிலும் மற்றவர்களை நியாயம் தீர்க்க முற்படுகிறோம் பவுல் ரோமர் 14 4 உன் பாவத்தை முதலில் பார் அப்போது மற்றவர்களின் பாவம் உன் கண்ணுக்கு தெரியாது மறைந்து விடும் என்று கருத்துப்பட கூறுகிறார். நம்மில் பலர் எம்முடைய குற்றங்களை மறந்து விடுகிறோம். அல்லது எம் மீது குற்றமில்லையென எண்ணுகிறோம் இது தவறு "நாமெல்லாரும் பாவிகள்" (ரோ 3 23) விபச்சார பெண்ணுக்கு கல் எறிந்தவர்களை பார்த்து இயேசு உங்களில் குற்றமில்லாதவன் இவள் மேல் முதலில் கல்லெறியக்கடவன் என்று கூறுகிறார். இன்று நாமும் பிறரை நியாயம் தீர்க்க முற்படும் போது இதே கேள்வியை இயேசு எம்மையும் பார்த்து கேட்கிறார் என அறிக.

நாம் எப்படி பிறரில் குற்றம் காண முற்படாமல் வாழ முடியும்? முதலில் நம்மை நாமே சோதித்து அறிய வேண்டும். சங்கீதம் 139. 23, 24 ஆம் வசனங்களில் தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும். என்னை சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும் என்று தினமும் கடவுளிடம் கேட்கவேண்டும்.

இரண்டாவது எம் நாவையும் உதட்டையும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். பவுல் யாக்கோபு நிருபத்தில் ஒரு சிறிய நெருப்பானது ஒரு பெரிய காட்டையே கொழுத்தி விடுவது போல் நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பல பெரிய பாதிப்புகளை செய்ய வல்லது என்கிறார். ஒரு பெரிய கப்பலை சிறிய சுக்கானால் மாலுமி தான் விரும்பிய பாதைக்கு கப்பலை கொண்டு செலுத்துவது போல் நாவைக் கட்டுப்படுத்தும் போது சரீரமே தலமானதாக மாறுகிறது. நாவு நம் முழு சரீரத்தையுமே கறைபடுத்த வல்லது. இதனைக் கவனியுங்கள்.

புதிய ஏற்பாட்டில் நியாயதீர்ப்பானது உலக முடிவில் தான் நடைபெறும் எனக்கூறப்பட்டாலும் நியாயத்தீர்ப்பானது நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சியாகவும் கூறப்படுகிறது. மேலும் யோவான் நற்செய்தி நூலில் நியாயதீர்ப்பு மனுமகனாகிய உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவிடமே ஒப்புவிக்கப்பட்டு இருக்கிறதென்றும் அவரின் இரண்டாம் வருகையுடன் முடிவு பெறுகிறது. என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, இயேசுகிறிஸ்து தன்னுடைய வாழ்க்கையில் சந்தித்த எவரையும் நியாயம் தீர்த்ததாக தெரியவில்லை. பாவியாகிய பெண்ணையும் தேற்றி அனுப்புகிறார். இதுபோல் நாமும் மற்றவர்களை நியாயம் தீர்க்காமல் மன்னித்து இயேசுவின் அன்பின் வழியை காட்டவே அழைக்கப்பட்டுள்ளோம்.

## உதை பந்தாட்டம் புதிய தலைவர்

இலங்கை உதை பந்தாட்டச் சம்மேளனத்தின் புதிய தலைவராக 51 வயதான ஜோசப் செபஸ்டியான் ஆனந்தராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை உதை பந்தாட்டச் சம்மேளனத்திற்கு தமிழர் ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது இதுவே முதல் தடவையாகும். கடந்த வாரம் நடைபெற்ற மேற்படி சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் ரி. பேரின்பநாயகத்தை 56 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்று திரு ஆனந்தராஜா புதிய தலைவரானது குறிப்பிடத்தக்கது.

## உயிர்த்தியாகி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏந்திய போர் வீரர் சிலர், உத்தரவிற்காகக் காத்திருந்தனர் 86 வயது நிரம்பிய பொலிக்கார்ப்பை அழைத்துவந்தனர். தன்னைச் சுற்றிலும் இருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தை பொலிக்கார்ப் பார்க்கிறார்.

நியாயாதிபதி கடைசி முறையாக பொலிகாப்பைப்பார்த்து முன்னர் பல முறை கேட்ட அதே கேள்வியையே கேட்கிறார்- 'பெரியவரே நீர் ஏன் இந்த வயோதிபகாலத்தில் இவ்விதம் மரணமடைய வேண்டும்?

இயேசுவை வணங்குவதை விட்டு விடும் நமது பேரரசனை வணங்குவதாகச்சொல்லும் உம்மை உடனே விடுதலை செய்கிறேன். என்ன சொல்லுகிறீர்?'' என்றார்'

பொலிக்கார்ப் அத்தியட்சர் நிமிர்ந்து நின்று நீதிபதியை மட்டுமல்ல, மற்றவர்களும் கேட்கத்தக்க முறையில 'ஐயனே, எண்பத்தாறு வருடங்களாய் என்னை ஆட்கொண்ட என் இயேசு ராஜாவுக்கு நான் அடிமையாயிருக்கிறேன். இந்த 86 ஆண்டுகளாக அவர் எனக்கு ஒரு போதாவது நம்பிக்கை துரோகம் செய்ததில்லையே; அத்தகைய என் இயேசு ராஜாவுக்கு நான் துரோகம் செய்யலாமா? நான் அவரை மறுதலிக்கவே மாட்டேன் - நீங்கள் செய்யக் கூடியதை செய்யுங்கள்'' என்றார்.

பக்தன் பொலிகார்ப்பை விறகுக் குவியல் இருந்த இடத்திற்கு இழுத்துச் சென்றார்கள் அங்கு ஒரு கம்பத்துடன் அவரைச் சேர்த்துக் கட்டினார்கள் "என்னை ஜீவ பலியாய் ஒப்புவித்தேன்'' ஏற்றுக் கொள்ளும் இயேசுவே என்ற கருத்துப்பட பரத்தை நோக்கி செபித்தார் கம்பத்தைச் சுற்றிக் குவிக்கப்பட்ட விறகுக் குவியல் எரிக்கப்பட்டது அ! என்ன அதிசயம் அக்கினிச் சுவாலை அவரைச் சுற்றிலும் மதில்களைப் போல் எழும்பின அவரையோ ஒன்றும் செய்யவில்லை. இதனைக் கண்ட அதிகாரி அங்கு நின்ற போர் வீரனை ஏவிவிட அவன் தன் ஈட்டியால் பக்தன் பொலிக்கார்ப்பைக் குத்திக் கொன்றான்.

இரத்தச் சாட்சிகளாகிய
தைரிய சேனை உம்மைப்
போற்றும்.

(தொகுப்பு சுவ்விலின்)

## நாக்கே, நாக்கே...!

மனித உறுப்பாகிய நாக்கும் பற்களும் மகிழ்ச்சியுடன் உரையாடின. நாக்கு பற்களை நோக்கி சொன்னது; கைமாறு கருதாது உழைக்கும் பற்களே என் நாக்கு எவ்வளவு சுவையாக அறுசுவை உணவைத் தருகிறாய்? நான் உனக்கு என்ன கைமாறு செய்யப்போகிறேன் என்று நீலிக் கண்ணீர் வடித்தது. உடனே பற்களோ நாக்கே, நாக்கே நீ ஒன்றும் செய்யவேண்டாம், சும்மா இருந்தால் போதும் வேண்டியதைச் சொல்லி நன்மையடைவதை விட்டு வேண்டாதவை சொல்லி விட்டு 'கர்' என்று இருந்து கொள்கிறாய் இதனை கேட்ட கனவான்களோ, நீ விலைக்கு வாங்கிய வம்புக்கு உனக்கு வெகுமதி கொடுக்காமல் சும்மா இருக்கும் எங்களைப் பார்த்து 'பல்லை உடைப்பேன் என்கிறார்கள்' எனவே 'நாக்கு நீ சும்மா இரு அதுபோதும்' என்றது.

(- திரு. பிரகாஸ் ஏசுவடியான் பிரசங்கத்திலிருந்து)

## சிந்தனைக்கு: மானிட விடுதலை

மானிட விடுதலை இறைவனில் தங்கியுள்ளது. அவரின் இரக்கம் விடுதலைக்கு மையமானது. மனிதனில் கிரியை விடுதலையை எதிர்பார்க்கச் செய்கிறது இக்கிரியை, எதிர்பார்த்த விடுதலை அதனையும் தாண்டி கிருபையை ஊனுடலாக்கி அன்பை உயிராக்கி இணைத்து கிறிஸ்துவில் வெளிப்படுத்தியது! இது மானிட விடுதலைக்கு அத்திவாரம் இட்டது எனலாம்! இது மறைந்திருக்கும் விடுதலை அல்ல இது செயல்படும் விடுதலை. கண்களால் காணக்கூடிய விடுதலை! அதைப் பார்த்து ஏற்றுக் கொள்கிறவன் விடுதலைப் பெறுகிறான் கிரியை எதிர்பார்க்காத விடுதலைமானிட விடுதலைக்காக மரத்திலே தூக்கி மாமிசத்தைக் கிழித்து விடுதலை அளித்தது அதி உன்னதம் அல்லவா. அந்த விடுதலை பெற்றவன் தன் பாரத்தை இறக்கி வைத்து விடுதலைக்காக நுகத்தை சுமந்து உலகைப் பண்படுத்தி விடுதலைக்கு வழிகாட்டுவான். அப்படிப்பட்டவனே கிறிஸ்துவில் விடுதலையடைந்தவனாவான்.

து. சி. யோசுவா
(கிறிஸ்தவ இறையியற் கல்லூரி)

## Sevak Selveratnam Remembered

A small group of the associates of Rev. S. Selveratnam and some friends of the Christa Seva Ashram met for a Service of Remembrance and Holy Communion on the 1st of April, 1995 at 7.30 a m., the 22nd death anniversary of Periannan Selveratnam. The service was conducted by Sevak Sam Alfred and the sermon preached by the Rev. S. S. Karunairaj, the Superintending Minister of the Methodist Church in the North

In his sermon Rev. Karunairaj recalled with nostalgia the scenes in his younger days when Selveratnam and Niles used to be present in almost all S C.M. and J. I. C. C. F. and other such youth and student gatherings in Jaffna and Ceylon. He also recalled the great ecumenical efforts of the Ashram in keeping the three denominations in Jaffna united.

It was a very relevant recollection for our times. As the Protestant Christian world celebrates the centenary of the World Student Christian Federation (WSCF) this year, there emerges a world-wide group of men and women referred to a the 'Community of Memory and Hope.' In that community of memory in our context here in Sri Lanka and in India we recollect a galaxy of men, of student Christian leaders such as Selveratnam, Niles, Chandran Devanesen, M. M. Thomas and Celestine Fernando who gave of their best to all Christian youth of their time. There were of course many others a little older and younger than them who also were associated with them in this enterprise at student gatherings of the JICCF, SCMS, YMCAs and the Triennial Conferences of India, Pakistan and Ceylon. Sevak Selveratnam was the chaplain par excellence at all these gatherings so much so Hendrik Kraemer invited him as Chaplain of the newly founded Ecumenical Institute in Bossey, Switzerland in the later 1940s.

In its Ecumenical vision and its day to day activities the Ashram was guided by a Board which was initiated by the Jaffna Christian Union of those days. The Board met very regularly to review the life and mission of the Ashram particularly in preserving its spiritual stamina

(Continued on page 8)



THE TRIUMPHAL ENTRY

**C. C. A. Appeals to ....**

(Continued from page 2)

## Pair Get Death

LAHORE: A Pakistani court sentenced two Christians to death for blaspheming the prophet Mohammad.Salamat Masih, 14, and Rehmat Masih, 44, were convicted after a trial that lasted more than a year. They plan to appeal

## Death Penalty

Salamat Masih, a member of the Christian minority, was originally arrested with two men, Manzoor Masih aged 35 and Rehmat Masih aged 37, in May 1993 and detained on charges of religious blasphemy. Salamat was accused of writing slogans on the local mosque at the incitement of the two men. However, local people have testified that Salamat Masih cannot read or write. Legal experts maintain that the charges which carry the mandatory death penalty were based on a local clergy's personal grievances. Salamat Masih was eventually released on bail in November 1993 and Manzoor and Rehmat were released in January 1994, although the charges remained pending against them.

In an attack following a court hearing on 5 April 94 in Lahore. Manzoor Masih was shot dead and Salamat, Rehmat and one other Christian, John Joseph, were seriously wounded. The attack took place near the Lahore High Court just after the Christians had left a court hearing. The attack was reportedly instigated by members of an Islamist party, the Sepah-e Sahaba. Since then three people have been arrested and charged in connection with the shooting.

Flash: We just received news that both are acquited and have left Pakistan.



Then Peter and the other disciple went to the tomb. The two of them were running, but the other disciple ran faster than Peter and reached the tomb first.

John 20: 3

**Surveillance of Warships in Vadamarachchi Seas**

Increased surveillance of warships of Sri Lanka Navy is observed for the last three days. This, people believe, will be a threat to fishing in the areas from Thondamannaru and Chundikulam.


**Angilican**

(Continued from page 2)

it out over the months ahead." The delegates to the meeting cited, "considerable co-operation between the two Churches in shared churches and partnerships throughout the country;a common concern for the work of the Church in society, especially in rural and inner city areas; and the dialogue taking place between the World Methodist Council and the Anglican communion," during the two decades that passed between talks. The meeting also agreed "to reaffirm the common ground they share; acknowledge one another as belonging to the one Universal Church; face frankly their remaining differences and find ways of overcoming them; and to develop practical ways of growing together.

(Church Times 03/1/95)

## in Grateful Memory



**Mrs. Harriet Wadsworth Winslow**
(Founder
Uduvil Girls' College)
Born: April 09, 1796
at
Norwich, Connecticut
USA
Entered Glory: 12th
January 1833 at Uduvil.

"The same God who has supported us hitherto, will not now forsake us. Verily, he is a friend in affliction"

**(Mrs. Winslow)**

Inserted by
Uduvil Girls' College.

# The Morning Star

Diocesan Office. Vaddukoddai 7,14 . 4. 1995


*EDITORIAL*

## New Future for All People

On Easter day we rejoice and praise God that Jesus is risen from the dead. Death is overcome with life – The disciples, who were shattered on the Good Friday without hope and without a future, suddenly found on Easter Day, new hope and new future for themselves and for the whole human kind.

St. Paul again and again speaks of the resurrection and the power of the resurrection. The power of the resurrection is God creating a new hope and a new future, when everything seems humanly impossible. The Biblical narratives tell of the acts of God in times of crises – making a way through the Red sea when the Isralites were pursued by the Egyptians, liberating them through a judge or a king, when their enemies oppressed and surrounded them, sending his message of comfort and return to Jerusalem, when they were in exile, enslaved and without hope. This resurrection hope is experienced by the Christian Church bringing assurance of a new future for them and for nations.

The greatest miracle of Easter is the power it released for new hope and new future for all people. The Resurrection not only in life after death but also here and now bringing hope to the outcasts and marginalised communities in every nation – slaves have been given hope of release, the captives freedom, the outcasts dignity and human values for a new life: the marginals recovered hope to enter into the main stream of life in community sharing in the resources and possibilities of human growth and development. The Resurrection is the assurance of God's power and action in every situation of hoplessness.

The risen Jesus sends out his disciples on his Father's mission. St.John writes about Jesus appearance to the disciples in the Upper Room, bringing a new vision and sending them out on mission (John 19:20-22). John writes of three things that happened in that encounter.

This disciples were glad, Jesus breathed on them the Holy Spirit with the words 'As the Father hath sent me so send I you'. He showed them the marks of his wounds in his hands and his feet.

This was the power they received from the Master for action in the world but with empty hands — marks of the cross and the resurrected Lord.

Jesus sends us with the same bidding in the power of the Holy Spirit. His empty hands challenge the Church to follow the path of his Cross and the Resurrection.

Easter releases new power into the lives of people—bringing hope, courage and power for action. The Church shares this hope and power and as the Messianic community in each context, bringing new hope of resurrection to all.

—Courtesy The South India Churchman

### Our Pastor's Visit Abroad

Our Pastor, Rev. S. Jeyanesan, went to Germany in January, 1995 to attend the Jubilee Celebrations of " Youth Federation of Munich. " He delivered the main Jubilee address on the 20th at the function and preached at the Thanksgiving Service held at the Lutheran Church in Munich. Mr. Udo Prinz, the Director of the Youth Federation supports two of our Projects in Mankulam-the Orphanage where we have 40 children and also the Day Care Centre and Feeding Centre at Mankulam, where 46 children are looked after every day. Rev. Jeyanesan explained the current situation in Sri Lanka and the work of the Diocese to the Churches and the Well Wishers in Germany.

Then he went to France from 25th to 30th of January and visited many of our Church Members and friends During that period a new Tamil protestant congregation was organised and a Communion Service was led by him in a Presbyterian Church building. A Committee was set up to look after the service arrangements

Later he visited Canada and participated in two Worship Services, led the Communion Services and preached the Sermons to a large number of Sri Lankan Tamil Christians. There were two meetings organised by the Tamils in Toronto where Rev. Jeyanesan spoke on current situation in Sri Lanka

### Sevak Selveratnam

(Continued from page 7)

of retreats, quiet days, Bible studies, the third order of life, the prayer cycles and the stream of devotional lyrics and music that sprung from it. It also included numerous meetings, seminars, consultations and conferences with international leaders of much repute and experience. The 'Call to Holy Living' initiated by the Ashram several decades ago is more relevant today than ever before in new ways and as we remember Sevak Selveratnam let us remember also to continue the task he initiated through the Ashram for our spiritual growth.

Ecumenicus

### 'Morning Star' Subscibers

(Continued from page 1)

Mr. G.G. Pannampalam Jnr
7. Gregory Road Colombo 7

The Publication Procurement Office
American Embess 44 Gale Rd. Colombo 3

The President Methodist Convent
Methodist Head Quartars
Colombo 3

Rev. James Ratnanaygam
Holy Trinity Church Vicrage
St Lawrance Rd Colombo 6

(To be continued)

*4th Death*

***ANNIVERSARY***

**of**

**Mr. Kanagasabai Kulasegaram**

Born **1931- 02- 12**

Called to Death **1991- 04-07**

**"The souls of the righteous are in the hand of God"**

Wisdom 3: 1

*Wife, Children & Son in Law*

Fourteenth Death ANNIVERSARY

**Sacred to the Memory of**

**V. N. AIYATHURAI**

WHO DIED ON

3rd of APRIL

**1981**

Foudly remembered by his everloving Wife Sons, Daughters, Sons-in-law, Daughter-in-law and Grand Children

**'Malar Manai' Church Road, Chavakachcheri.**

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, 182, 1st Cross Street, Jaffna on Friday the 14th of April 1995 and Published by Mr. G. Nadaraja, Diocesan office, Vaddukoddai.